Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

## மே நாள் ஊர்வல ஊர்திகள்; பத்திற்கு பரிசளிக்க ஏற்பாடு

இவ்வருட மே நாளை முன்னிட்டு இடம்பெறவுள்ள ஊர்வலத்தில் பங்கு கொள்ளும் ஊர்திகளில் தரம் வாய்ந்த பத்து ஊர்திகளுக்கு பரிசுகள் வழங்கப் படவுள்ளது என மே நாள் ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. அரச திணைக் களங்கள், கூட்டுறவுத்துறை, தனியார் நிறுவனங்கள், வெகுஜன அமைப்புக்கள் மிக எழுச்சியுடன் சமகால நிகழ்வுகளை வெளிப்படுத்தும் வகையில் இவ்வருட மே நாளை முன்னெடுக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது சம்பந்த மாக ஊர்வலத்தில் பங்குகொள்ளும் ஊர்திகளினது அமைப்பு பின்வரும் சித்தரிப் புக்களைக் கொண்டதாக விளங்கவேண்டுமென (4 ஆம் பக்கம் பார்க்க)

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 சித்திரை 12 [25-04-93] ஞாயிற்றுக்கிழமை ஓசை 66

# பிரேமதாசா மீது குற்றச்சாட்டு

# கொலைக்கு அரசே முழுப்பொறுப்பு

## காமினி பகிரங்க கண்டனம்

(கொழும்பு)

"ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத்முதலியின் கொலை ஓர் அரசியற் படுகொலை. இதனைப் பிரேமதாசா அரசே செய்தது" இவ்வாறு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உபதலைவர் காமினி திசாநாயக்கா பிரேமதாசா அரசுமீது பகிரங்கக் குற்றஞ்சாட்டினார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத்முதலி கொலை செய்யப்பட்டமைபிரேமதாசா அரசின் அனுசரணையுடன் நடைபெற்ற கொலை என கட்சியின் உப தலைவர் காமினி திசாநாயக்க நேற்று செய்தியாளரிடம் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் இக்கொலையில் விடுதலைப் புலிகளின் தொடர்பு இருப்பதை முற்றாக மறுத்துள்ளார். விடுதலைப் புலிகள் அப்படி செய்வதாயின் அரசாங்கம் கொழும்பில் அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதன் மூலம் மட்டுமே இப்படிப் பட்ட கொலைகளைச் செய்ய முடியும் என்றார்.

எதுஎப்படி இருந்த போதும் இக்கொலையின் பின்னணியில் இக்கொலையின் காரண கர்த்தாவாகபிரேமதாசா அரசாங்கம் இருக்கிறது என்றார். லலித் அத்துலத்முதலி 1984 தொடக்கம் 1989 வரைகாலப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டார். எனினும் அதற்காக விடுதலைப் புலிகள் இதனைச் செய்தார்கள் என்று கூறமுடியாது என்றார்.

பிரேமதாசாஅரசாங்கம்இக் கொலையில் இருந்து தப்பும் நோக்குடனே சர்வதேச விசாரணை நாடுகின்றது என்றார்.

லலித் அத்துலத்முதலி கொலை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஏற்பட்ட பலத்த அடி என்றும் லலித்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## லலித்தின் கொலை செய்தி; ஜனாதிபதிக்கு அதிர்ச்சியாம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சரும், ஜனநாயக ஐக்கிய தேசியமுன்னணியின் தலைவர்களில் ஒருவருமான லலித் அத்துலத்முதலியின் மறைவையிட்டு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா ஆழ்ந்த அதிர்ச்சியும், துயரமும் தெரிவித்துள்ளார்.

அவர் இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக விடுத்திருக்கும் அனுதாப அறிக்கையில் மேலும்,

இது ஒரு கோழைத்தனமான கொடூரமான செயல் ஆகும். நியாயமான, சிந்தனையுள்ள எவராலும் ஏற்றுக்

அத்துடன் இந்தக் கொலை நிகழ்ந்த சூழ்நிலை பற்றி முழுமையான விசாரணை ஒன்றை நடாத்தும்படி சம்பந்தபட்ட அதிகாரிகளுக்குத் தான் பணிப்புரை விடுத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொலைகாரர்களைக் கண்டு பிடித்துச் சட்டத்தின் முன் நிறுத்த அரசாங்கம் தனது ஆற்றல்கள் முழுவதையும் பயன்படுத்தும் என்றும், அரசாங்கம் கடந்த நான்கு ஆண்டு காலமாக ஜனநாயக முறையைப் பாதுகாக்கும் அதேசமயம் சமாதானம், ஒழுங்கு ஆகியவற்றை மீண்டும் நிலை

## நெஞ்சில் பாய்ந்த குண்டே மரணத்திற்கு காரணம்

### வைத்திய அறிக்கை தெரிவிப்பு

(கொழும்பு)

துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி கொழும்பு பெரியாஸ் பத்திரியில் அனுமதிக்கப்பட்ட லலித் அத்துலத் முதலி நேற்று முன்தினம் இரவு 11.05மணி

நெஞ்சில் பாய்ந்த குண்டினால் இதயம், ஈரல், சுவாசப்பை ஆகியவற்றில் ஏற்பட்ட பாதிப்பினால் இவர் மரணம் அடைந்தார் என்று கொழும்பு வைத்தியசாலை வெளியிட்ட

## புலிகள் மீது பழி சுமத்த அரசாங்கம் முயற்சி

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் தேசிய பந்தோபஸ்து அமைச்சருமான லலித் அத்துலத் முதலியைக் கொலை செய்தவரின் சடலத்தை கண்டுபிடித்துள்ளதாக சிறிலங்கா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கிரிலப்பனையில் நேற்று முன்தினம் இரவு கொலை நடைபெற்ற இடத்திலிருந்து சுமார் 100 யார் தொலைவில் நேற்று நண்பகல் 10.00 மணியளவில் கிருலப்பனை கூட்டுறவு சங்க கடைக்கு அருகாமையில் இந் நபரின் சடலத்தை பொலிசார் கண்டுபிடித்தனர்.

மார்பில் பலத்த துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்தவரின் கையில் 9 மில்லி மீற்றர் செக்கோசிலோவாக்கிய தயாரிப்பு கைத்துப்பாக்கியும் இருந்ததாம். அவ்விடத்தில் காணப்பட்ட அடையாள அட்டை மூலம் இறந்தவர் யாழ்ப்பாணம் மானிப்பாயைச் சேர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## துப்பாக்கிச் சூடு பட்டதும் லலித் மேடையில் வீழ்ந்தார்.

(கொழும்பு)

துப்பாக்கி நபர் மிக அண்மையில் நின்றே லலித் அத்துலத்முதலி மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார் எனவும் அவரை நோக்கி மூன்று துப்பாக்கிக் குண்டுகள் தீர்க்கப் பட்டதை தான் நேரில் கண்டதாகவும் அத்துலத்முதலியின் அந்தரங்கசெயலாளர் சர்மிளா பெரேரா நேற்று தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தல் கூட்டத்தில் அத்துலத்முதலி உரையாற்றிக்கொண்டிருந்த போதே இச்சம்பவம் நடைபெற்றதாக தெரிவித்தார்.

துப்பாக்கிப் பிரயோகத்தை தொடர்ந்து லலித் மேடையில் சரிந்து விழுந்தார் என்றும் அவ்வேளை அதைத் தொடர்ந்து மெய்ப்பாதுகாவலர் துப்பாக்கி நபரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் துப்பாக்கி நபருக்கும் மெய்ப்பாதுகாவலர்களுக்கும் இடையே துப்பாக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஸ்காட்லண்டை அமைக்க

## வீரச்சாவு



வீரவேங்கை

கௌரவன்



வீரவேங்கை

கலைமாறன்

நவுண்டிலியாமடுவில் அமைந்திருந்த விடுதலைப்புலிகளின் முகாமொன்றை கடந்த 19 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றி வளைத்துத் தாக்கியபோது விடுதலைப் புலிகள் பதில் தாக்குதல் நடாத்தினர். இத்

சின் அனுசரணையுடன் நடைபெற்ற கொலை என கட்சி விக்கையில் இக்கொலையில் விடுதலைப் புலிகளின் தொட

களுக்கு பாதுகாப்பு அளிப்ப தன் மூலம் மட்டுமே இப்படிப்பட்ட கொலைகளைச் செய்ய முடியும் என்றார்.

எதுஎப்படி இருந்த போதும் இக்கொலையின் பின்னணியில் இக்கொலையின் காரண கர்த்தாவாகபிரேமதாசா அரசாங்கம் இருக்கிறது என்றார். லலித் அத்துலத்முதலி 1984 தொடக்கம் 1989 வரைகாலப்

கூறமுடியாது என்றார்.

பிரேமதாசாஅரசாங்கம்இக் கொலையில் இருந்து தப்பும் நோக்குடனே சர்வதேச விசாரணை நாடுகின்றது என்றார்.

லலித் அத்துலத்முதலி கொலை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஏற்பட்ட பலத்த அடி என்றும் லலித்

[4 ஆம் பக்கம் பார்க்க]

நடைபெற்ற இடத்திலிருந்து சுமார் 100 யார் தொலைவில் நேற்று நண்பகல் 10.00 மணி

பாணம் மானிப்பாயைச் சேர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## லலித்தின் கொலை செய்தி; ஜனாதிபதிக்கு அதிர்ச்சியாம்

(கொழும்பு)

மூன்னாள் அமைச்சரும், ஜனநாயக ஐக்கிய தேசியமுன்னணியின் தலைவர்களில் ஒருவருமான லலித் அத்துலத்முதலியின் மறைவையிட்டு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா ஆழ்ந்த அதிர்ச்சியும், துயரமும் தெரிவித்துள்ளார்.

அவர் இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக விடுத்திருக்கும் அனுதாப அறிக்கையில் மேலும்,

இது ஒரு கோழைத்தனமான கொடூரமான செயல் ஆகும். நியாயமான, சிந்தனையுள்ள எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு செயல் இதுவாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இந்தக் கொலை நிகழ்ந்த சூழ்நிலை பற்றி முழுமையான விசாரணை ஒன்றை நடாத்தும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தான் பணிப்புரை விடுத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொலைகாரர்களைக் கண்டுபிடித்துச் சட்டத்தின் முன் நிறுத்த அரசாங்கம் தனது ஆற்றல்கள் முழுவதையும் பயன்படுத்தும் என்றும், அரசாங்கம் கடந்த நான்கு ஆண்டு காலமாக ஜனநாயக முறையைப் பாதுகாக்கும் அதேசமயம் சமாதானம், ஒழுங்கு ஆகியவற்றை மீண்டும் நிலைநாட்ட முயற்சிஎடுத்துவந்தது. நாடு இத்தகைய கசப்பான

[4 ஆம் பக்கம் பார்க்க]

## நெஞ்சில் பாய்ந்த குண்டே மரணத்திற்கு காரணம்

### வைத்திய அறிக்கை தெரிவிப்பு

(கொழும்பு)

துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி கொழும்பு பெரியாஸ் பத்திரியில் அனுமதிக்கப்பட்ட லலித் அத்துலத் முதலி நேற்று முன்தினம் இரவு 11.05மணியளவில் மரணமானார் என வைத்திய அறிக்கை தெரிவிக்கின்றது.

நெஞ்சில் பாய்ந்த குண்டினால் இதயம், ஈரல், சுவாசப்பை ஆகியவற்றில் ஏற்பட்ட பாதிப்பினால் இவர் மரணம் அடைந்தார் என்று கொழும்பு வைத்தியசாலை வெளியிட்ட வைத்திய அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## துப்பாக்கிச் சூடு பட்டதும் லலித் மேடையில் வீழ்ந்தார்


(கொழும்பு)

துப்பாக்கி நபர் மிக அண்மையில் நின்றே லலித் அத்துலத்முதலி மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார் எனவும் அவரை நோக்கி மூன்று துப்பாக்கிக் குண்டுகள் தீர்க்கப்பட்டதை தான் நேரில் கண்டதாகவும் அத்துலத்முதலியின் அந்தரங்கசெயலாளர் சர்மிளா பெரேரா நேற்று தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தல் கூட்டத்தில் அத்துலத்முதலி உரையாற்றிக்கொண்டிருந்தபோதே இச்சம்பவம் நடைபெற்றதாக தெரிவித்தார்.

துப்பாக்கிப் பிரயோகத்தை தொடர்ந்து லலித் மேடையில் சரிந்து விழுந்தார் என்றும் அவ்வேளை அதைத் தொடர்ந்து மெய்ப்பாதுகாவலர் துப்பாக்கி நபரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் துப்பாக்கி நபருக்கும் மெய்ப்பாதுகாவலர்களுக்கும் இடையே துப்பாக்

[4 ஆம் பக்கம் பார்க்க]



வீரவேங்கை கலைமாறன்

நவுண்டிலியாமடுவில் அமைந்திருந்த விடுதலைப்புலிகளின் முகாமொன்றை கடந்த 19 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர்சுற்றிவளைத்துத் தாக்கியபோது விடுதலைப் புலிகள் பதில் தாக்குதல் நடாத்தினர். இத்தாக்குதலின்போது சிறிலங்கா இராணுவத்தினர் தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

விடுதலைப்புலிகள் தரப்பில் வீரவேங்கை கௌரவன் (கனகசபை பவளசிங்கம்,பண்டாரியவெளி, கொக்கட்டிச்சோலை) வீரவேங்கை கலைமாறன் (குமாரதாஸ் ஜெயதாஸ், அருள்நேசபுரம், குருக்கள் மடம். மட்டக்களப்பு) ஆகிய இரு போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

★

# கொழும்பில் பதற்ற நிலை; இராணுவம், கடற்படை அழைப்பு

[கொழும்பு]

ஜனநாயகஐக்கியதேசியமுன்னணித் தலைவர் லலித் அத்துலத் முதலி சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பதற்றம் நிலவுவதாகவும் அதனையடுத்து கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் இராணுவம், மற்றும் கடற்படையினர் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பரபரப்பான பலவதந்திகள் பரவி வருவதனால் அச்சம் காரணமாக மக்கள் நடமாட்டம் வெகுவாக குறைந்து காணப்பட்டதாகவும்,போக்குவரத்து குறைந்து காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை அரசிற்கு எதிரான ஊர்வலங்கள் இடம் பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொரளை, மொரட்டுவ. தெகிவளை போன்ற பகுதிகளில் ஊர்வலங்கள்இடம்பெற்றுள்ளதாகவும் பல கல்வீச்சு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பார்வையிடச் சென்ற அமைச்சர்மீது கல்வீச்சு

[கொழும்பு]

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருந்த லலித் அத்துலத் முதலியைப் பார்வையிடச் சென்ற அமைச்சர் ஒருவர் மீது கற்கள் வீசப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் கலாநிதி விமால் விக்கிரமசிங்க மீதே ஆஸ்பத்திரி வாயிலில் நின்று கொண்டிருந்த அத்துலத்முதலியின் ஆதரவாளர்களும், பொது மக்களும் கற்களை வீசியதாக தெரியவருகிறது. இதேவேளை ஆஸ்பத்திரி வாசலில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிமீதும் கல்வீச்சுநடாத்தப்பட்டது.

இதேவேளை லலித் அத்துலத் முதலி சுடப்பட்ட செய்தி கேட்ட எதிர்க்கட்சி தலைவி சிறிமாவோபண்டாரநாயக்கா ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்வையிட்டார். மேலும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் பொது மக்களும், ஆஸ்பத்திரி வளவிலும், அவரது வீட்டிலும் திரண்டு நின்றதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

## தகவல் வழங்குவோருக்கு 50 இலட்சம் சன்மானம்

(கொழும்பு)

லலித் அத்துலத் முதலியின் கொலையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சம்பந்தப்பட்ட நபர் அல்லது நபர்களை கைதுசெய்வதற்கு உரிய தகவல்களை வழங்குபவர்களுக்கு 50 இலட்சம் ரூபா சன்மானமாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துலத்முதலி கொலையில் சம்பந்தப்பட்டவர்களை கைதுசெய்யஉதவும்படி பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

## ஸ்காட்லண்டை அழைக்க அரசாங்கம் பணிப்பு

(கொழும்பு)

லலித் அத்துலத்முதலி கொல்லப்பட்ட சம்பவம் பற்றிய புலன் விசாரணையில் ஈடுபடுவதற்காக லண்டனிலுள்ள 'ஸ்காட்லண்ட் யார்ட்' பொலிசாரின் உதவியை நாடும்படி ஜனாதிபதி பிரேமதாசா பாதுகாப்பு அமைச்சைப் பணித்துள்ளார்.இது தொடர்பாக கொழும்பிலுள்ள பிரிட்டன் உயர்ஸ்தானிகராலயம் மற்றும் லண்டனிலுள்ள சிறிலங்காத் தூதுவரகம் என்பவற்றிற்கு ஊடாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

## "ஸ்காட்லண்ட்யார்ட்" நாளை கொழும்பு வரும்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க விடுத்த கோரிக்கையை ஏற்று ஸ்காட்லண்ட் யார்ட் புலனாய்வு பொலிசார் புலனாய்வு அத்தியட்சகர். மருத்துவப் பிரிவைச் சேர்ந்த ஆய்வு நிறுவன நிபுணர் ஆகியோர் உட்பட நான்கு அதிகாரிகள் கொண்ட குழு ஒன்றை அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.


இந்தப் புலனாய்வுக்குழு இன்று அங்கிருந்து புறப்பட்டு நாளை காலை இலங்கையை வந்தடைவர் என பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை விடுத்த கோரிக்கையை ஸ்காட்லண்ட் யார்ட் புலனாய்வுப் பிரிவு ஏற்றுக் கொண்டது என ஜெனரல் ரணதுங்க தெரிவித்தார்.

## லலித் கொலை தொடர்பாக பொலிசார் விசாரணை

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியின் தலைவர் திரு. லலித் அத்துலத்முதலி படுகொலை செய்யப்பட்டது தொடர்பான விசாரணையில் சிறிலங்காப் பொலிசார் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பொலிசார் தெரிவித்துள்ள தகவலின்படி திரு. அத்துலத் முதலி கிரிலப்பனையில் தேர்தல் பிரசாரம் ஒன்றில் நேற்றுமுன் தினம் மாலை உரையாற்றிக் கொண்டிருந்தபோது துப்பாக்கி நபர் ஒருவரினால் சுடப்பட்டதுடன் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு உடனடியாக கொண்டு செல்லப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயங்களினால் இரவு 11.00 மணியளவில் அங்கு அவர் உயிரிழந்தார்.



வீரவேங்கை ராயு

சந்திவெளி பாலையடித் தோணா என்னும் இடத்தில் கடந்த 21ஆம் திகதி புதன் கிழமை காலை 9.30 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவரும், ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவு அடைந்தனர்.

வீரவேங்கை ராயு (நாகலிங்கம் பாஸ்கரன், சந்திவெளி, மட்டக்களப்பு), ஆதரவாளர் சுரேஸ்வேலுப்பிள்ளைசுரேந்திரன் (சந்திவெளி, மட்டக்களப்பு) ஆகியோரே வீரச்சாவு அடைந்தவர்களாவர்.

இந் நால்வருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## மின்சாரம் வேண்டுமென்றே அரசால் துண்டிக்கப்பட்டது

### ஐ. ஐ. தே. மு வேட்பாளர் தெரிவிப்பு

[கொழும்பு]

கிருலப்பனையில் நேற்று முன்தினம் கூட்டம் நடைபெற்ற மைதானப் பகுதியிலும் சூழ உள்ள பகுதியிலும் வேண்டுமென்றே மின்சாரம் துண்டிக்கப் பட்டிருந்ததாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் கிருலப்பன பகுதி வேட்பாளர் உபில் தம்பிக்க குற்றம் சாட்டியுள்ளார்.

அப்பகுதிக்கு பொலிஸ் பாதுகாப்பு எதுவும் வழங்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் மாலை 5.00 மணியளவில் கூட்டம் ஆரம்பமாகியது அப்பொழுது அப்பகுதியில் ஒரு பொலிசாரும் இருக்கவில்லை. சில நிமிடங்களின்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## புதன்கிழமை மரணச் சடங்கு

[கொழும்பு]

நேற்று முன்தினம் துப்பாக்கிச் சூட்டினால் மரணமான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் அத்துலத்முதலியின் மரணச் சடங்குகள் எதிர்வரும் புதன்கிழமை பொரளை கனத்தை மயானத்தில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## அத்துலத்முதலி கொலை; ஐ. தே. க. செயலர் அறிக்கை

(கொழும்பு)

லலித் அத்துலத்முதலி கொலை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும். வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான திரு. சிறிசேன குரே அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சியினர் சம்பவங்களை அரசியல் லாபங்களுக்காக சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் வழமையான தந்திரோபாயத்தைக் கொண்டிருப்பது வெளிப்படையாக உள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### செந்தமிழ்ப் பாட்டு இசை நிகழ்ச்சி

யாழோசை மன்றக் கலை மேம்பாட்டிற்காக யாழோசையினருடன் பல பாடகர்கள், பாடகிகள் பங்கேற்று சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்ச்சி யாழ் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. நுழைவாயில் ரிக்கற்றுகளை, யாழ். பூபாலசிங்கம்புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம். (4640)

### சேவை

றெனி மூக்குக்கண்ணாடியகம் உங்கள் கண்களை பரிசோதித்து கண்ணாடி சரியாகவழங்கப்படும். இல. 288, நாவலர் வீதி, ஆனைப்பந்தி (யாழ் தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) யாழ்ப்பாணம். (சி/6356)

### விற்பனைக்கு

நல்ல இன அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு வயது 50 நாட்கள். பூச்சி அகற்றப்பட்டவை. வரதன் சைக்கிள் கடை, அரசடிச் சந்தி, நவாலி தெற்கு. (4750)

### சுகவாழ்வுக்குத் தூபம்

நித்திய சுகவாழ்விற்குத் தினமும் காலை மாலை வீட்டில் நீம் தூபம் புகையுங்கள். அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது மில்க்வைற் [சி-6490]

### இடமாற்றம்

91/1 மின்சார நிலைய வீதியில் இயங்கிவந்த 'மேர்வின்ஸ்' என்ற றபர்சீல் பிளாஸ்ரிக் வேலைகள் செய்யும் எமது ஸ்தாபனம் தற்போது அதே வீதியில் மலாயன் கபேக்கு முன்னால் இயங்கி வருகிறது என்பதை அறியத் தருகிறோம். (4718)

### வருடாந்த உற்சவம்

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று பகல் 11 30 மணிச்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 6ஆம் திகதி சண்டேசுவரர் உற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளது.

### இரண்டாம் தவணை ஆரம்பம்

---

## 31ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி இலட்சுமணன் அன்னலெட்சுமி

அன்னையின் மடியில்: 15-05-1944 ஆண்டவன் அடியில்: 26-03-1993

''அன்பெனும் ஒளி ஒன்று அணைந்தது
பாசமென்னும் அன்புக்கயிறு அறுந்தது''
அன்னையின் மடியில் மதிமுகம்போல் தோன்றினாயே!
சகோதரர்களுடன் பாசத்தில் பிணைந்தாயே!
கணவனுக்கு மனத்தக்கவளாய் அமைந்தாயே!
நன்மக்கட் பேறுகளைப் பெற்றாயே!

எங்கள் அன்பின் குடும்ப விளக்காய் ஒளிர்ந்து
பாசத்தில் கடல்வெள்ளம் போல் கருணை
காட்டி எங்கள் இதயத்தில் தெய்வமாய்
குடிகொண்டு திகழ்ந்த அன்னையே!

கனவுதான் கண்டோமா - உன்பிரிவை
நினைவுதான் மறப்போமா!
மாதம் ஒன்று சென்றதம்மா!
ஆண்டுபல சென்றாலும் உன்பிரிவை
என்றென்றும் மறவோம் அம்மா.

அவரது வீட்டுக்கிருத்தியம் குடியிருப்பு வவுனியாவில் அவரது இலலத்தில் நடைபெறும்.!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

நீங்கள் பறந்து சென்றதால் வாடும் இதயங்கள்.
கணவன், மக்கள், மருமக்கள்,
பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனர்கள், பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பு. செல்வகுமார்,
கொக்குவில மேற்கு,
கொககுவில். (4751)

---

இதயம் நீங்காப் பிரிவினில் உருகிடும்...

## 31-ம் நாள் நினைவலைகள்

---

மாகாணசபைத் தேர்தல்

## எவரை ஆதரிப்பது என்பதில் தமிழ்க் கட்சிகள் குழப்பம்

(கொழும்பு)

தமிழ்க் கட்சிகளும், தமிழ்க் குழுக்களும் வரும் மாகாண சபைத்தேர்தலில் எந்தக் கட்சிக்கு ஆதரவு தெரிவிப்பது என்பது குறித்து ஒத்த கருத்துக்கு வரமுடியாமல் குழப்பமடைந்திருப்பதாகத் தெரியவருகிறது

எந்தவிதக் காரணம்கொண்டும் யு. என். பியைத் தான் ஆதரிக்கப்போவதில்லைஎன்று ஈ.பி.ஆர்.எல் எவ். தெரிவித்துள்ளது

தமிழர்களை எதிர்நோக்கியுள்ள முக்கியமான பிரச்சினை இனப்பிரச்சினை இனயுத்தத்திற்கு ஒரு முடிவைக்கொண்டு வராமலும், மாகாண சுயாட்சி பற்றி ஒரு தெளிவான நிலைப்பாட்டை வெளியிடாமலும் யு என். பி. மற்றும் எஸ் எல். எவ். பி. டி யு என். எவ். ஆகிய கட்சிகள் தமிழ் வேட்பாளர்களைத் தேர்தலில் நிறுத்துவது அர்த்தமற்ற செயலாகும் என்று ஈ.பி.ஆர்.எல். எவ். பேச்சாளர்தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கிற்கு வெளியில் வாழும்தமிழர்கள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவை ஆதரிக்குமாறு புளொட் கோரியுள்ளது

தமிழர் பிரச்சினையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் நவசமசமாஜக் கட்சியும் ''நியாயமான ஒரு நிலைப்பாட்டினை''க் கொண்டிருப்பதால் அக்கட்சிகளில் ஒன்றைத் தமிழர்கள் ஆதரிக்கலாமென்ற கருத்தும் சில குழுக்கள் மத்தியில் நிலவிவருகிறதாம்.

எம்.சிவசிதம்பரமும், மாவை சேனாதிராசாவும் நாடு திரும்பியதும் இத்தேர்தலில் எக்கட்சியை ஆதரிப்பது என்பது குறித்துத் தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவுசெய்யுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வடக்கு, கிழக்கிற்கு வெளியில் உள்ள தமிழர்கள் தேர்தலில் தமது எதிர்ப்பு வாக்குகளைப் பதிவுசெய்யுமாறு தமிழ்க்காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் கேட்டுள்ளார்.

---

தனியார் கல்வி நிறுவனங்களின்
ஒன்றியம்
மருதனார்மடம் கல்விக் கோட்டம்

### விசேட பொதுக் கூட்டம்

இடம் : இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை
காலம் : 26-04 93 (திங்கள்) பி.ப. 4 மணி
விடயம் : மேதினம் தொடர்பான கலந்துரையாடல்

பொதுச்சபை உறுப்பினர் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்.

- செயலாளர்.

(4752)

---

### சேவை

சகலவிதமான உணவு வகைகளுக்கும் ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும். வெளிநாட்டில் பயிற்சி பெற்ற உணவு வல்லுநர்களின் ஆலோசனைக்கேற்ப உணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது. ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள். உண்மை புலப்படும்.

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா உணவகம்**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

(சி-6439)

---

முறைசாராக் கல்வி தொழிற்திறன் பயிற்சி

## மாணவர் தெரிவிற்கான நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

முறைசாராக்கல்வி தொழிற்திறன் பயிற்சிகளில் சேர்வோருக்கான நேர்முகப் பரீட்சைகள் இடம் பெறவுள்ளன வலிகாமம், தென்மராட்சிப் பகுதிகளில் இருந்து விண்ணப்பித்தவர்களுக்கு எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கல்வித்திணைக்களத்திலும், வடமராட்சியில் நடைபெறவுள்ள பயிற்சிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அடுத்த மாதம் 3 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

விண்ணப்பதாரிகளுக்கு தனித்தனிக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் கடிதம் கிடைக்காதோரும் தமது பாடசாலை விடுகைப் பத்திரம், பிறப்புச் சான்றிதழ், கல்வித் தகைமைச் சான்றிதழ் தொழிற் தகைமைச் சான்றிதழ், அடையாள அட்டை ஆகியவற்றுடன் நேரில் சமர்ப்பித்து தோற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (பா

---

## பூப்புனித நீராட்டு நிகழ்வு அழைப்பு

எமது மூத்த மகள்
செல்வி இராதிகா இராஜதுரை
அவர்களின்

பூப்புனித நீராட்டு நிகழ்வு நாளை (திங்கள்) 26-04-1993 அன்று காலை 8 30 தொடக்கம் 10.00 மணிவரையுள்ள சுபமுகூர்த்தவேளையில் அச்சுவேலியில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் வருகை தந்து செல்வியை ஆசீர்வதிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்,

(தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்பமுடியாமைக்கு வருந்துகின்றோம்)

திரு. க. இராஜதுரை அவர்களும்
(அதிபர், நடேஸ்வரக் கல்லூரி,
கொத்தணி அதிபர் காங்கேசன்துறை)
துணைவியார்
திருமதி த. இராஜதுரையும்.

'இராமானந்தா'
அச்சுவேலி வடக்கு
அச்சுவேலி.
(4759)

---

## நினைவு கூருகின்றோம்...

## 1993-04-25

1986ஆம் ஆண்டு மட்டு-வாழைத்தோட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய-

**மதன்** (அருள்நாயகம் தயானந்தராசா - வாகரை - மட்டு.)

**கரன்** (வெற்றிவேல்பிள்ளை தம்பிப்பிள்ளை-வெருகல், முட்டுச்சேனை, மூதூர் - திருமலை)

1989ஆம் ஆண்டு மட்டுநகரில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட திருமலை கிண்ணியாவைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

ஏழாலையில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கட்டுவன்புலம் மகாவித்தியாலய உயர் வகுப்பு மாணவன்.

1991ஆம் ஆண்டு யாழ் - காரைநகரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

91/1 மின்சார நிலைய வீதியில் இயங்கிவந்த 'மேர் வின்ஸ்' என்ற றபர்சீல் பிளாஸ்ரிக் வேலைகள் செய்யும் எமது ஸ்தாபனம் தற்பேது அதே வீதியில் மலாயன் கபேக்கு முன்னால் இயங்கி வருகிறது என்பதை அறியத் தருகிறோம். (4718)

## வருடாந்த உற்சவம்

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் இனறு பகல் 11 30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 6ஆம் திகதி சண்டேசுவரர் உற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளது.

## இரண்டாம் தவணை ஆரம்பம்

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் இரண்டாம் தவணை எதிர் வரும் 29ஆம் திகதி ஆசிரிய கலாசாலைகளுக்கு என நிர்ணயிக்கப்பட்ட தவணைக்கால வரையறைக்கிணங்க ஆரம்பமாகும் எனவும் இதில் எதுவித மாற்றமும் இல்லை எனவும் அதிபர் திரு கா. சிவப்பிரகாசம் அறிவித்துள்ளார்.

## வீதி விளக்குகள் பொருத்துவதில் துரிதம்

[வடமராட்சி]

வல்வெட்டித்துறை சணபதி படிப்பகம் பிரதான வீதியில் ஐந்து வீதிவிளக்குகளை பொருத்தியுள்ளது. ஊறணி வேம்படிப் பகுதிக்குள் மேற்படி விளக்குகள் பொருத்தப் பட்டுள்ளன. மற்றும் வல்வெட்டித்துறை நகரசபை மூலமாக வீதி விளக்குகள் பொருத்துவதற்கான ஏற்பாடுகள் துரிதமடைந்து வருகின்றன. ஒரு மாத காலத்திற்குள் வீதி விளக்குகள் பொருத்தி வைக்கப்படுமென நகரசபை செயலாளர் தெரிவித்தார். [யோ]


பதிவு
செய்து கொள்ளுங்கள்

ஏகோபித்த வாடிக்கையாளர்கள் வருகையால் உங்கள் உணவுப் பார்சலுக்கு முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா உணவகம்**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

[சி-6438]


குடிகொண்டு திகழ்ந்த அன்னையே!

கனவுதான் கண்டோமா - உன்பிரிவை
நினைவுதான் மறப்போமா!
மாதம் ஒன்று சென்றதம்மா!
ஆண்டுபல சென்றாலும் உன்பிரிவை
என்றென்றும் மறவோம் அம்மா.

அவரது வீட்டுக்கிருத்தியம் குடியிருப்பு வவுனியாவில் அவரது இலலத்தில் நடைபெறும்.!


ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

நீங்கள் பறந்து சென்றதால் வாடும் இதயங்கள்.
கணவன், மக்கள், மருமக்கள்,
பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனர்கள், பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பு. செல்வகுமார்,
கொக்குவில மேற்கு,
கொககுவில். (4751)

இதயம் நீங்காப் பிரிவினில் உருகிடும்...

## 31-ம் நாள் நினைவலைகள்



| மண்ணில் | மனதில் |
|---|---|
| 1930 | 1993 |
| 07 | 03 |
| 04 | 26 |

அமரர்

## பரமு. கைலாயபிள்ளை

அவர்கள்

(இளைப்பாறிய சாவ/இந்து ஆசிரியர்)

(திதி: 25-04-93)

சிரித்துக் கலகலத்துச் சிந்தனையை வளர்த்தவனே
மரித்தனையோ மண்விட்டு மன்னவனே! - சரித்தனனோ
காலனாங் கொடுமையினன் கைலாய பிள்ளையையா
ஞாலத்தில் நின்றிலங்கும் பேர்!

ஃ ஃ ஃ

பல்லாயி ரஞ்சீடர் பாரெல்லாம் புகழ்பரப்பச்
சொல்லா லுலகளந்த தூயவனே - நில்லாது
பறந்தனையோ பகலவனே பாசமுடை எம்மைவிட்டு
நிறையுமெங்கள் நெஞ்சிலுந்தன் பேர்!

ஃ ஃ ஃ

பெற்றவர்கள் மணக்கோலம் காணவென்று ஓடினையே
கற்றவனுன் பிணக்கோலம் கண்டோமே - நற்றவனே
உன்னுடலைக் கூடவிங்கு அஞ்சலிக்க வகையின்றி
இன்னலுற்று ஏங்குகிறோம் நாம்!

இன்று அமரர் அவர்களின் பெரிய மாவடி-இல்லத்தில் இடம் பெறும் நினைவுக் கிரியைகளிலும் - மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், சக ஆசிரியர்கள் ஆகியோரை அன்புடன் அழைக்கின்றோம்.

பெரியமாவடி,
சாவகச்சேரி.
25-04-93 (சி-6496)

க. பொ. மயில்வாகனம்
(இளைப்பாறிய அதிபர்)

- செயலாளர்.

(4752)


## சேவை

சகலவிதமான உணவு வகைகளுக்கும் ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும். வெளிநாட்டில் பயிற்சி பெற்ற உணவு வல்லுநர்களின் ஆலோசனைக்கேற்ப உணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது. ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள். உண்மை புலப்படும்.

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா உணவகம்**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

(சி-6439)


27 - 03 - 1993 இல் அமரத்துவமடைந்த

## திரு. செல்லப்பிள்ளை யோசேப்

அவர்களின்

## 31-ம் நாள் மரணஞாபகம்

26 - 04 - 1993

தோற்றம்: 28-04-1934 மறைவு: 27-03-1993

''இன்றுதானே நீ என்னோடு கூடபரகதியில் இருப்பாய்'' என்று திருவாய் மலர்ந்தருளிய தயாளம் மிகுந்த இறைமகனாகிய யேசுவே மரித்த உமது அடியான் யோசேப்பின் பாவங்களை மன்னித்து அவரது ஆன்மாவுக்கு உமது இறை அரசில் இடம் அளித்தருளுவீராக.

நாளை 26-04 93 திங்கள் காலை 6 30 மணிக்கு மிருசுவில் புனித நீக்கலஸ் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியின் போது இவரது ஆன்மாவுக்காக மன்றாடுமாறு உற்றார், உறவினர் அனைவரையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

உசன்-மிருசுவில்: மனைவி மேரி யோசெப்பின்சோதியும்
[3393] பிள்ளைகளும்,


## எமது புதிய வெளியீடுகள்

1) கமல் – பானுப்ரியா
"கலைஞன்"
2) பிரசாந் – சுபாஸ்ரீ
"எங்கதம்பி"
3) சிலம்பரசன் – சரவணன்
"பெற்றெடுத்த பிள்ளை"

**குணம்**
**வீடியோ சென்ரர்**

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி-6498)


## நினைவு கூருகின்றோம்...

## 1993-04-25

1986ஆம் ஆண்டு மட்டு-வாழைத்தோட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய-

**மதன்** (அருள்நாயகம் தயானந்தராசா - வாகரை - மட்டு.)

**கரன்** (வெற்றிவேல்பிள்ளை தம்பிப்பிள்ளை-வெருகல், முட்டுச்சேனை. மூதூர் - திருமலை)

1989ஆம் ஆண்டு மட்டுநகரில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட திருமலை கிண்ணியாவைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

ஏழாலையில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கட்டுவன்புலம் மகாவித்தியாலய உயர் வகுப்பு மாணவன்.

1991ஆம் ஆண்டு யாழ் - காரைநகரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**குமார்** (மார்க்கண்டுபிறேம்குமார் - விக்காவல் வடக்கு, காரைநகர் - யாழ்)

யாழ் - ஊர்காவற்றுறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**கார்த்திக்** (இராஜேஸ்வரன் சந்திரகுமார் - சங்குவேலி தெற்கு, சண்டிலிப்பாய் - யாழ்.)

**ராசிக்/ராபிக்** (நாகேஸ்வரக்குருக்கள் - மதனசூதனன்- கந்தசாமி கோவிலடி. இணுவில்- யாழ்.)

**மனோஜ்** (அழகன் கருணாநிதி - ஓவாப்பேட் எஸ்டேட், - மலையகம்)

1992ஆம் ஆண்டு மணலாறு - கொக்கிளாய்க்கும் - கொக்குத்தொடுவாய்க்குமிடையே எதிர்பாராத விதமாக ஏற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் வேங்கையன்/ரத்தன்** (மார்க்கண்டு யோகநாதன் - சின்னவத்தை - மட்டு.)

**லெப். செங்கோலன்/தயான்** (தியாகராசா தயாபரன் - திருமலை வீதி - மட்டு.)

**லெப். கருணன்/கர்ணன்** (தவராசசீலன் பிரதீபன் இருதயபுரம - மட்டு.)

**2-ம் லெப். முத்து/அசந்தன்** (தங்கராஜா மன்மதராஜ்-)

**கப்டன் சிவராஜன்/சிவராஜ்** (அல்பேட் அருள்சீலன் - பாலையடி, புதுக்குளம், வட்டக்கண்டல் - மன்னார்)

மன்னார் - பரப்புக்கடந்தானில் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டு எமைப்பிரிந்த-

**சேகர்** (அந்தோனி டேவிற் - ஆட்காட்டிவெளி, அடம்பன் - மன்னார்)

மட்டுநகரில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த-

**கவியரசன்/பூட்டான்** (திரவியராசா மனோகரன்- புளியந்தீவு - மட்டு.)

யாழ் - குருநகர்ப் பகுதியின் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த போது எதிர்பாராத விதமாக கடலில் மூழ்கியதில் எமைப்பிரிந்த-

**தபேந்தினி** (மஞ்சுளாதேவி பூபாலசுந்தரம் - மாமுனை செம்பியன்பற்று - தாளையடி - யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/6495]

சிந்தனைக்கு

நேர்மையான அரசியல்வாதி என்பவர், தான் விலை போன பின்பு, விலை கொடுத்து வாங்கியவருக்கு விசுவாசமாய் இருப்பவர்.

- ஸைமன் கேமரான்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 25-04-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## சிறிலங்காவில் 'புதிய ஜனநாயகம்'

சிறிலங்காவின் முன்னணி எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத் முதலி சுட்டுக் கொல்லப்பட்டமையானது சிறிலங்காவின் ஜனநாயக ஆட்சியில் ஏற்பட்ட ஓர் அரசியல் விபத்தல்ல. இது சிறிலங்கா ஜனநாயகத்தில் கடந்த பல வருடங்களாக இடம்பெற்று வரும் தொடர் சம்பவங்களில் ஓர் அம்சம்.

இவ்வாறான கொலைகள் / 'விபத்து' மரணங்கள் எவையும் திட்டவட்டமாக எவ்வாறு நிகழ்ந்தன, இதன் சூத்திரதாரிகள் யார்? என்பன குறித்து தெளிவான விசாரணை முடிவுகள் இதுவரை கிடைக்கவில்லை. இதேபோன்றே லலித்தின் கொலை தொடர்பாகவும் முழுமையான தெளிவான விசாரணைகள் கிடைக்கப் பெறுமா என்பது சந்தேகமே. ஏனெனில் தலைநகரான கொழும்பில் இக்கொலை நடைபெற்றதாயினும் இதுதொடர்பாகக் கிடைக்கப் பெறும் தகவல்கள் மிகவும் தெளிவற்றதாகவுவே உள்ளன.

இதேவேளை இக்கொலையை யார்புரிந்தனர்? எதற்காகப் புரிந்தனர் ? ஏன் இந்நேரத்தில் புரிந்தனர்? என்பது போன்ற கேள்விகள் யாவற்றிக்கும் நிதர்சனமான பதில்எதுவாகஇருப்பினும்அதற்கான முழுப்பொறுப்பையும் ஜனாதிபதி பிரேமதாசாவே ஏற்கவேண்டும். ஏனெனில், சிறிலங்கா அரசியலில் அதிகாரத்தில் இருப்பவர்கள் அரசியற் கொலைகளில் ஈடுபடுவது இன்று ஒரு சாதாரண விடயமாக மாறிவருகின்றது. ஆகையினால்கொலை தொடர்பாக ஜனாதிபதி பிரேமதாசா ஆழ்ந்த அனுதாபமும் கவலையும், தெரிவிப்பதினாலோ அன்றி, விசாரணைக்கு உத்தரவிடுவதினாலோ பிரச்சினை தீர்ந்துவிடக் கூடியவை அல்ல. ஏனெனில், இவை யாவும் சம்பிரதாய பூர்வமானவையும், தப்பிப்பதற்கான வழிஎன்பதுமே பொதுவான கருத்தாகும்.

ஏனெனில், சிறிலங்காவில் இடம்பெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்களில் வன்முறைகள் இடம்பெறுவதற்கான அரசியல் சூழ்நிலை பற்றி முன்னரே எச்சரிக்கப்பட்டு வந்தது. சில வெளிநாட்டுச் செய்தி ஸ்தாபனங்கள் ஐ. தே. கட்சி அரசாங்கம் தேர்தலின்போது வன்முறையைக் கட்டவிழ்த்து விட முயற்சிப்பதாகவும் தெரிவித்தன. அத்தோடு வன்முறையின் ஊடு தேர்தல் ...

# இனப்பிரச்சினையை தீர்க்க சிறப்புத் திட்டம் வேண்டும்

### சு. கட்சி செயலாளர்

(கொழும்பு)

இனப் பிரச்சினையைத் தீர்க்கவும், தகுந்த முறையில் அதிகாரப் பரவலாக்கம் செய்யவும் மாகாண சபையிலும் பார்க்க சிறந்த திட்டங்கள் வேண்டும் என்றும், அத்தகைய திட்டத்தை பாராளுமன்ற தேர்தல் காலத்திலும் ஜனாதிபதி தேர்தல் காலத்திலும் மக்கள் முன் வைப்போம் என்றும் சுதந்திரக் கட்சியின் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், மாகாணசபை ஆட்சி முறை இனப்பிரச்சினையைத் தீர்க்கவில்லை. எதிர்பார்க்கப்பட்ட அதிகார பரவலாக்கமும் மாகாண மட்டத்திற்கு செல்லவில்லை. நாம் தேர்தல்களில் வெற்றி பெற்று ஆட்சிபீடம் ஏறியதும் மாகாணசபைக்கு மேம்பாடான நல்லதொரு மாற்றுத் திட்டத்தை முன்வைப்போம் என்றும் குறிப்பிட்டார்.

## இ. தொ. கா. ஒத்துழைப்பில் ஐ. தே. க. நம்பிக்கை

### தொண்டமான் கருத்து

(கொழும்பு)

ஐ. தே. கட்சி நடைபெறவுள்ள தேர்தல்களில் இலங்கை தொழிலாளர்காங்கிரசின் ஒத்துழைப்பினால் வெற்றியடைய முடியுமென நம்பிக்கை வைத்துள்ளது என அமைச்சர் தொண்டமான் நுவரெலியாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

நம்மை எவராவது மதிக்க வேண்டுமானால் நமது பலத்தைப் பாதுகாக்க வேண்டும். நான் கடந்த 1977 ஆம் ஆண்டிலேயே முதலாவது எம்.பி. யாக இருந்தால் இந்நேரத்தில் உரிமைகள் அனைத்தையும் பெற்றிருக்கலாம். பரவாயில்லை. எதிர்வரும் 21 ஆம் நூற்றாண்டில் எமது சமுதாயம் எல்லா உரிமைகளையும் அனுபவிக்க வேண்டும் எனவும் அமைச்சர் தொண்டமான் மேலும் தெரிவித்தார்

## தேர்தலை முன்னிட்டு லீவுகள் யாவும் ரத்து

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறுவதற்கு வசதியாக சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

அடுத்த மாதம் 9ஆம் திகதியில் இருந்து 18ஆம் திகதி வரை மாகாணசபைகளிலும், மத்தியவங்கியிலும் தொழில் புரிவோர் உட்பட அரசாங்க சேவையில் உள்ள எந்த அதிகாரிகளுக்கும் விடுமுறை வழங்கக் கூடாது. ஏற்கனவே வழங்கப்பட்ட எந்த விடுமுறையும் இக்காலகட்டத்தின் போது ரத்து செய்யப்படும் என சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது.

மேலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து அவசர தேவைகளுக்கான விடுமுறை வழங்கல் பற்றி முடிவு எடுப்பர் என தெரியவருகின்றது. இக்கால கட்டத்தில் வெளிநாடு செல்ல எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்வும் தெரியவருகின்றது.

## பணவீக்க அதிகரிப்பால் கடனை மட்டுப்படுத்துக

### மத்தியவங்கி கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் பணவீக்கம் அதிகரித்துள்ளதால் கடன் வழங்குவதை மட்டுப்படுத்துமாறு மத்திய வங்கி வர்த்தக வங்கிகளைக் கேட்டுள்ளது.

வங்கிகள் கடன் வழங்குவதைக் குறைக்காது விட்டால் வட்டி வீதத்தை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் எச்.பி.திஸாநாயக்கா கொழும்பில் வர்த்தக வங்கிகளின் பிரதிநிதிகள் கூட்டம் ஒன்றில் பேசும்போது கூறினார். பணவீக்கம் அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பணம்வீக்கம் 20 சத விகிதம் அதிகரித்ததைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை என்று வங்கி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## தீர்வையின்றி பெற்ற பஜிரோ தனியாருக்கு விற்பனை

### விண்ணப்பம் கோரல்

எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறவிருக்கும் 5-ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்காக பரீட்சை ஆணையாளரால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

குறித்த விண்ணப்பப்படிவங்கள் மாவட்டக்கல்வி அலுவலகங்கள், கோட்டக்கல்வி அலுவலகங்கள் ஊடாக பாடசாலைக்கு வழங்கப்பட்டு பின்னர் அவை பாடசாலை அதிபர்களால் பூர்த்தி செய்யப்பட்டு இம்மாத இறுதிக்கிடையில் பரீட்சைப்பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டுமென பரீட்சைத்திணைக்கள ஆணையாளர் மாவட்டக்கல்விப்பணிப்பாளர்களுக்கு கட்டளைபிறப்பித்துள்ளார்.

### மலர் வெளியீடு

காரைநகர் மணிவாசகர் சபை பொன்விழா மலர்வெளியீடு மே மாதம் 2 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் சிவத்தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது தமிழீழத்தின் சைவ அறிஞர்களின் ஆசியுரை, ஆய்வுரை, கருத்துரைகள் இடம்பெறவுள்ளன.

### கலந்துரையாடல்

தொழில்நுட்பக்கல்வி ஆசிரியர் பதவிக்கு நேர்முகப் பரீட்சைக்கு உரிய நேரத்தில் கடிதம் கிடைக்காதோர் தமது நியமனம் தொடர்பாகக் கல்விச் சேவை ஆணைக்குழுவுக்கு மகஜர் அனுப்பத் தீர்மானித்துள்ளனர். இம் மகஜர் பற்றிக் கலந்துரையாடுவதற்காக

## வீட்டுத் தோட்டப் போட்டி முடிவுகள் வெளியாகின

[யாழ்ப்பாணம்]

அரியாலை 74 வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட வீட்டுத் தோட்டப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

மேற்படி போட்டியில் சின்னையா செல்வரெத்தினம் முதலாமிடத்தையும், முத் தமிழ்ராசா தனபாலசிங்கம் இரண்டாமிடத்தையும், தர்மலிங்கம் நவரூபன் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

இவ்வீட்டுத் தோட்டப் போட்டிகளில் கடந்த மூன்று வருடங்களாகத் திரு. சி செல்வரெத்தினம் தொடர்ந்து முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## வேட்பாளர் பெயர்கள் தார் பூசி அழிப்பு

[கொழும்பு]

நடைபெற இருக்கும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் இரு கட்சிகளின் வேட்பாளர்கள் வீதியோரத்தில் உள்ள கற்களில் பெயரையும், சின்னத்தையும் பொறித்திருந்ததைக் கண்ட பொலிஸார் அவற்றை அழித்து விடுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இதனைத் தொடர்ந்து பாதையோரக் கற்களில் பொறிக்கப்பட்டிருந்த பெயர்களும், சின்னங்களும் தார் பூசி அழிக்கப்பட்டன.

வேட்பாளர்களின் பெயர்களையும், சின்னங்களையும் பொது இடங்களில் எழுதக் கூடாது என்ற தேர்தல் விதிமுறையின் கீழ் பொலிசார் இந்த உத்தரவை விடுத்ததாகத் தெரியவருகின்றது.

மலையகத்தில் மூக்கியமாக ஒரு மாவட்டத்தில் போட்டியிடும் இரு கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்களே ஏட்டிக்குப் போட்டியாக பாதையோரங்களில் தமது பெயர்களைப் பொறித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முல்லை. மக்கள் வங்கி இயங்க வைக்க முயற்சி

[வடமராட்சி]

இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்த முல்லைத்தீவு மக்கள் வங்கியை மீண்டும் இயங்கவைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சியில் இயங்கிவரும் முல்லைத்தீவு இலங்கை வங்கிக் கிளையை புதுக்குடியிருப்பில் இயங்கவைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இவ்விரு வங்கிகளையும் புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கட்டடத்தில் இயங்கவைப்பதற்கான ஏற்பாடுகளை முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. தருமகுலசிங்கம் எடுத்து வருகின்றார். (யே)

### தற்கொலை

கணவனுடன் ஏற்பட்ட குடும்பத்தகராறினால் மனமுடைந்த இளம் குடும்பப் பெண் தோட்டக் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவம் அல்வாய் அத்தாய் என்ற பகுதியில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

பரமேஸ்வரன் சந்திரவதனா (வயது 27) மூன்று பிள்ளைகளின் தாயெனவும், இவர் ஒரு மனநோயாளி எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேல் விசாரணைகளை மேற்கொண்ட மரணவிசாரணை அதிகாரி திரு. வீ. நடராசா தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கினார். (யோ)

## 97 நாட்களின் பின்னர் கிடைத்த உள்ளூர்த் தபால்

நீர்கொழும்பிலிருந்து வவுனியாவிற்கு அனுப்பிய கடிதமொன்று 97 நாட்களின் பின் வவுனியாவந்து சேர்ந்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி நீர்கொழும்பில் அஞ்சல் செய்யப்பட்ட கடிதமொன்று வவுனியாவில் உள்ள விலாசதாரர் ஒருவருக்கு வந்து ... நத்தார் பண்டிகையை கொண்டாடிய விதம் பற்றி அவர் எழுதியிருந்தார். ஆச்சரியப்பட்டேன்.

டிசம்பர் 31 ஆம் திகதி நீர்கொழும்பில் அஞ்சல் செய்யப்பட்டதற்கான முத்திரை அதில் பொறிக்கப்பட்டிருந்தது

இந்த கம்பியூட்டர் யுகத்திலும் தபால் ...

நிதர்சனமான பதில்எதுவாகஇருப்பினும்அதற்கான முழுப்பொறுப்பையும் ஜனாதிபதி பிரேமதாசாவே ஏற்கவேண்டும். ஏனெனில், சிறிலங்கா அரசியலில் அதிகாரத்தில் இருப்பவர்கள் அரசியற் கொலைகளில் ஈடுபடுவது இன்று ஒரு சாதாரண விடயமாக மாறிவருகின்றது. ஆகையினால்கொலை தொடர்பாக ஜனாதிபதி பிரேமதாசா ஆழ்ந்த அனுதாபமும் கவலையும், தெரிவிப்பதினாலோ அன்றி, விசாரணைக்கு உத்தரவிடுவதினாலோ பிரச்சினை தீர்ந்துவிடக் கூடியவை அல்ல. ஏனெனில், இவை யாவும் சம்பிரதாய பூர்வமானவையும், தப்பிப்பதற்கான வழிஎன்பதுமே பொதுவான கருத்தாகும்.

ஏனெனில், சிறிலங்காவில் இடம்பெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்களில் வன்முறைகள் இடம்பெறுவதற்கான அரசியல் சூழ்நிலை பற்றி முன்னரே எச்சரிக்கப்பட்டு வந்தது. சில வெளிநாட்டுச் செய்தி ஸ்தாபனங்கள் ஐ. தே. கட்சி அரசாங்கம் தேர்தலின்போது வன்முறையைக் கட்டவிழ்த்து விட முயற்சிப்பதாகவும் தெரிவித்தன. அத்தோடு வன்முறையின் ஊடு தேர்தல் நடத்துவதில் இலங்கையில் ஜனாதிபதி பிரேமதாசா போன்று அனுபவம் வாய்ந்தவர்கள் இல்லை என்றும் கூறலாம். 1988, 1989 ஆம் ஆண்டுகளில் பெரும் வன்முறையின் மத்தியில் தேர்தல் ஒன்றை நடத்தி ஐ. தே. கட்சிக்கும், தனக்கும் வெற்றியை தேடிக் கொடுத்தவர் பிரேமதாசா ஆகும்.

இதேவேளை, லலித் அத்துலத் முதலியின்கொலையுடன் சிறிலங்கா 'ஜனநாயகப் பாரம்பரியம்' ஓர் எல்லைக் கோட்டை அடைந்து விட்டது எனக் கூறுவதிலும் மிகையில்லை. அதாவது, சிறிலங்காவின் ஆட்சி அதிகாரப் போட்டி இனிமேல், மக்கள் வாக்குகளினால்மட்டுமல்ல ஆயுத பலத்தினாலுமே தீர்மானிக்கப்படப் போகின்றது என்பதே அதுவாகும். அதன் பிரகாரம் இனிமேல் அரசியல் எதிரிகள் கருத்துமோதலுக்கு அப்பால் ஆயுத மோதலுக்கும் தயாராக இருந்தால் மட்டுமே அரசியலில் ஈடுபட முடியும் என்பதே அதன் வெளிப்பாடாகும்.

சிறிலங்காவில் இன்று ஏற்பட்ட இவ்வளர்ச்சியானது திடீரென உருவானதொன்றல்ல. இலங்கை 'சுதந்திரமடைந்த' காலத்தில் இருந்து தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகள் அரச பயங்கர வாதத்தினால் அடக்கப்பட்டதிலிருந்து உருவானதாகும். இதற்கு லலித் அத்துலத் முதலியும் போதிய பங்களிப்புச் செய்துள்ளார்.

இதனால், இதற்கு சிறிலங்கா ஜனாதிபதிபிரேமதாசாவையோ அன்றி, வேறு அரசியல்வாதிகளையோதனியாகக்குற்றம் சாட்டுவதில் பயனில்லை. தமிழர் தமது நியாயமான உரிமைகளைக் கோரிய போது அதனை ஆயுதம் கொண்டு அடக்க முற்பட்ட அரசியல் வாதிகளும், அரசியல் வாதிகளின் சொற்களைக் கேட்டு எதுவித சிந்தனையும் இன்றி அவர்களின் அதிகாரப் போட்டிக்கு ஆதரவு கொடுத்த சிங்கள மக்கள் அனைவருமே பொறுப்பேற்க வேண்டும்.

ஆனால், சிங்கள மக்கள் தற்பொழுதும் சிந்திக்காது தொடர்ந்து அரசியல் வாதிகளின் பேச்சுக்களையே நம்பி இருப்பார்களேயானால் மார்க்கோஸ் கால பிலிப்பைன்ஸிலும், அண்மையில் தாய்லாந்திலும் இடம் பெற்றது போன்று எதிர் காலத்தில் சிங்களவர் ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்கென பெருமளவு இரத்தம் சிந்த வேண்டி வரும்.

சேவையில் உள்ள எந்த அதிகாரிகளுக்கும் விடுமுறை வழங்கக் கூடாது. ஏற்கனவே வழங் ... நாடு செல்ல எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்னவும் தெரியவருகின்றது.

## பணவீக்க அதிகரிப்பால் கடனை மட்டுப்படுத்துக

### மத்தியவங்கி கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் பணவீக்கம் அதிகரித்துள்ளதால் கடன் வழங்குவதை மட்டுப்படுத்துமாறு மத்திய வங்கி வர்த்தக வங்கிகளைக் கேட்டுள்ளது.

வங்கிகள் கடன் வழங்குவதைக் குறைக்காது விட்டால் வட்டி வீதத்தை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் எச்.பி.திஸாநாயக்கா கொழும்பில் வர்த்தக வங்கிகளின் பிரதிநிதிகள் கூட்டம் ஒன்றில் பேசும்போது கூறினார். பணவீக்கம் அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பணம்வீக்கம் 20 சத விகிதம் அதிகரித்ததைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை என்று வங்கி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## தீர்வையின்றி பெற்ற பஜிரோ தனியாருக்கு விற்பனை

(கொழும்பு)

அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் தீர்வையின்றி இறக்குமதி செய்யப்பட்ட கார் தனியார் ஒருவருக்கு விற்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இளைஞர் நல சேவைக்கு பயன்படுத்தப்போவதாகக் கூறியே இந்த பஜிரோ வாகனம் தீர்வையின்றி இறக்குமதிசெய்ய அனுமதிக்கப்பட்டது.

மிக நவீன சாதனங்கள் பல பொருத்தப்பட்ட இந்த வாகனத்தின் விலை 60 இலட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த பஜிரோ வாகனத்துக்குத் தீர்வையாக மாத்திரம் 3 இலட்சம் ரூபா அற விட்டிருக்கலாம் என்று சுங்கப் பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

முதலில் கொழும்பிலுள்ள மருத்துவர் ஒருவருக்குத் தனிப்பட்ட பாவனைக்காக விற்கப்பட்ட பஜிரோ பின்னர் இரத்தினபுரியில் உள்ள வர்த்தகருக்கு விற்கப்பட்டுள்ளதாகச் சுங்க விசாரணைகளிலிருந்து தெரியவருகின்றது.

இப்போது சுங்கப் பகுதியினரின் பாதுகாப்பில் பஜிரோ வைக்கப்பட்டுள்ளது. பஜிரோ கைமாற்றப்பட்டது குறித்து அரச சார்பற்ற நிறுவனத்தின் அதிகாரிக்குளதுவும் தெரியாது என்று சொல்லப்படுகிறது.

காரைநகர் மணிவாசகர் சபை பொன்விழா மலர்வெளியீடு மே மாதம் 2 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் சிவத்தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது தமிழீழத்தின் சைவ அறிஞர்களின் ஆசியுரை, ஆய்வுரை, கருத்துரைகள் இடம்பெறவுள்ளன.

### கலந்துரையாடல்

தொழில்நுட்பக்கல்வி ஆசிரியர் பதவிக்கு நேர்முகப் பரீட்சைக்கு உரிய நேரத்தில் கடிதம் கிடைக்காதோர் தமது நியமனம் தொடர்பாகக் கல்விச் சேவை ஆணைக்குழுவுக்கு மகஜர் அனுப்பத் தீர்மானித்துள்ளனர். இம் மகஜர் பற்றிக் கலந்துரையாடுவதற்காக 29 - 04 - 1993 அன்று காலை 9.00 மணிக்கு கல்வித்திணைக்களத்தில் கூடவுள்ளதாக அதன் இணைப்பாளர் அறிவித்துளளார்.

### பொலிசார் படுகாயம்

மட்டக்களப்பு - பொலநறுவை எல்லைப் புறத்தில் உள்ள அழிஞ்சிப்பொத்தானையில் அமைக்கப்பட்டிருந்த சிறிலங்காப் பொலிஸ் காவலரண் மீதுவிடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலில் பொலிஸார் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார். கடந்த 16 ஆம் திகதி இரவு இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரியவருகிறது.

... வடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இவ்விரு வங்கிகளையும் புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கட்டடத்தில் இயங்கவைப்பதற்கான ஏற்பாடுகளை முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. ... (வயது 27) மூன்று பிள்ளைகளின் தாயெனவும், இவர் ஒரு மனநோயாளி எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேல் விசாரணைகளை மேற்கொண்ட மரணவிசாரணை அதிகாரி திரு. வீ. நடராசா தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கினார். (யோ)

## 97 நாட்களின் பின்னர் கிடைத்த உள்ளூர்த் தபால்

நீர்கொழும்பிலிருந்து வவுனியாவிற்கு அனுப்பிய கடிதமொன்று 97 நாட்களின் பின் வவுனியாவந்து சேர்ந்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி நீர்கொழும்பில் அஞ்சல் செய்யப்பட்ட கடிதமொன்று வவுனியாவில் உள்ள விலாசதாரர் ஒருவருக்கு வந்து சேர 97 நாட்கள் எடுத்துள்ளன. கடந்த 7 ஆம் திகதி வந்து கிடைத்த இக்கடிதத்தின் ஆமைவேகம் குறித்து விலாசதாரரான ராஜரட்ணம் என்பவர் தெரிவித்ததாவது.

என்மனைவி நீர்கொழும்பில் வசித்து வருகிறார். அவரிடமிருந்து நீண்டநாட்களாக கடிதம் வரவில்லை. ஏதும் சுகவீனமோ என்று ஏங்கிக் கொண்டிந்தேன். வேலையை விட்டு நேரில் போகமுடியாத நிலை. இதனால் கவலையோடு தமிழ் புதுவருட விடுமுறையை எதிர்பார்த்திருந்தேன்.

நல்லவேளை கடந்த 7 ஆம் திகதி மனைவியின் கடிதம். வந்தது. பிரித்துப்படித்தேன் நத்தார் பண்டிகையை கொண்டாடிய விதம் பற்றி அவர் எழுதியிருந்தார். ஆச்சரியப்பட்டேன்.

டிசம்பர் 31 ஆம் திகதி நீர்கொழும்பில் அஞ்சல் செய்யப்பட்டதற்கான முத்திரை அதில் பொறிக்கப்பட்டிருந்தது

இந்த கம்பியூட்டர் யுகத்திலும் தபால் இலாகாவிற்கு ஆமை வேகம் தான் அத்துபடியாகிப் போய்விட்டது.

### மாணவர் சமுகம் தரவும்

(யாழ்ப்பாணம்)

காரைநகரிலிருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் கல்விகற்கும் மாணவர்களுக்கான இரண்டாம் தவணை எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் சகலமாணவர்களையும் யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயத்திற்கு சமுகமளிக்கும்படி காரைநகர் கொத்தணி அதிபர் திரு.செ தேவதாசன் கேட்டுள்ளார்.

# பயங்கரவாத நாடுகள் பட்டியலில் பாகிஸ்தான்

## -சி.ஐ.ஏ. தலைவர் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

சர்வதேச பயங்கரவாத நாடுகளின் பட்டியலில் பாகிஸ்தான் சேர்க்கப்படவுள்ளது என்று அமெரிக்க மத்திய புலனாய்வு அமைச்சரான சி. ஐ. ஏயின் இயக்குநர் ஜேம்ஸ் கூல் தெரிவித்துள்ளார்.

சர்வதேச பயங்கரவாதம் பற்றிய அறிக்கையை இம் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் செனட் கமிட்டிக்கு அனுப்பி வைத்துள்ளது.

செனட் கமிட்டி முன்பாக சாட்சியமளித்த ஜேம்ஸ் கூல் மேலும் கூறுகையில், காஷ்மீர் மற்றும் சீக்கிய தீவிரவாதிகளுக்குபாகிஸ்தான் தொடர்ந்து உதவி வருவதாகவும் அவர்களுக்கு பாதுகாப்பான புகலிடமாக இருந்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

## பாகிஸ்தான் அரசியல் நிலை ஐரோப்பிய சமூகம் கவலை

(பிரேஸல்ஸ்)

பாகிஸ்தானின் தற்போதைய அரசியல் நடவடிக்கைகள் குறித்து ஐரோப்பிய சமூக நாடுகள் கவலை தெரிவித்துள்ளன. அந் நாட்டில் ஜனநாயக முறை ஏற்பட முழு ஆதரவு காட்டும்படி பாகிஸ்தானின் ஆட்சியாளர்களுக்கு அந்நாடுகள் வேண்டுகோளும் விடுத்துள்ளன. 1988ஆம் ஆண்டிற்குப்பின் பாகிஸ்தானில் ஜனாதிபதியினால் ஆட்சி கலைக்கப்படுவது இது மூன்றாவது தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. ஐரோப்பிய சமூக நாடுகள் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையொன்றில் இவற்றை சுட்டிக்காட்டியுள்ளன.

### ஒலிவர் தம்போ காலமானார்

ஆபிரிக்க தேசிய காங்ரகிசின் முக்கிய தலைவர்களில் ஒருவரான ஒலிவர் தம்போ நேற்றுக்காலை ஜோகானஸ்பேர்க் நகரில் மாரடைப்பால் காலமானார். சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு லண்டனில் ஆபிரிக்க தேசிய காங்கிரசை ஸ்தாபித்தவர்களில் ஒருவராவார். அறுபதுகளில் ஆபிரிக்க தேசிய காங்கிரசின் உபதலைவராகவும், எழுபதுகளில் அதன் தலைவராகவும் இருந்த தம்போ சில காலமாக நோய்வாய்ப்பட்டிருந்ததாக அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

## பதவி விலகப் போவதாக அமைச்சர்கள் அறிவிப்பு

### பாக். அரசுக்கு நெருக்கடி

(இஸ்லாமாபாத்)

பஞ்சாப், பலுசிஸ்தான், வடமேற்கு மற்றும் சிந்து மாகாணங்களில் இருக்கும் மாகாண ஆட்சிகளைக் கலைக்காது விட்டால் பதவி விலகப் போவதாக தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அமைச்சர்கள் பாகிஸ்தான் அதிபர் குலாம் இஷாக்கானிடம் தெரிவித்துள்ளனர்.

இதனால் தற்போது பிரதமராயிருக்கும் மசாறியின் ஆட்சிக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாக சொல்லப்படுகின்றது.

அண்மையில் பாகிஸ்தானின் நவாப்ஷெரீப் தலைமையிலான அரசு கலைக்கப்பட்டு தேசிய ஜனநாயகக் கூட்டணி, மக்கள் ஜனநாயகக் கூட்டணி மற்றும் ஐ. ஜே. எப். என்னும் முக்கிய மூன்று குழுக்கள் கொண்ட காபந்து அரசு அமைக்கப்பட்டது தெரிந்ததே.

தமிழக சிறையிலிருந்து

## கைதி தப்பி ஓட்டம் காவலருக்கு சிறை

(சென்னை)

தமிழ் நாட்டு சிறையில் இருந்து இலங்கைத் தமிழர் சக்திவேல் தப்பியோடியது தொடர்பாக சிறைக் காவலர் மூவர் சிறைவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சக்திவேல் தப்பியோடுவதற்கு சிறை அதிகாரிகள் உடந்தையாக இருந்தார்கள் என்ற சந்தேகத்தின் கீழ் இவர்களை கைது செய்ததாகவும் தப்பியோடிய சக்திவேல் ஒரு புலிகள் உறுப்பினர் எனவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஈழநாதம்

# புலிகளுடன் தமிழக அரசு வர்த்தக உடன்படிக்கை

## தமிழ்நாடு எதிர்க்கட்சித்தலைவர் தெரிவிப்பு

(சென்னை)

விடுதலைப் புலிகள் தமிழ் நாட்டிலிருந்து எரிபொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்களை கடத்திச் செல்வது தொடர்பாக தமிழக அரசு விடுதலைப் புலிகளுடன் வர்த்தக உடன்பாடு ஒன்றை செய்துள்ளதாக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இவ்வாறு உடன்படிக்கை செய்திருப்பதாலேயே விடுதலைப் புலிகளுக்கு எதிராக தமிழக அரசு நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாத நிலையில் இருப்பதாக அவர் தெரிவித்தார். இதனால் தேசிய பாதுகாப்பிற்கு அபாயம் ஏற்படுகிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

பாட்டாளிமக்கள்கட்சிவிடுதலைப்புலிகளுக்கு ஆதரவானது எனக்கூறி இந்திரா காங்கிரஸ் பாட்டாளி மக்கள் கட்சியின் ஆதரவை ஏற்றுக்கொண்டது. பற்றி முதலமைச்சரும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளருமான செல்வி ஜெயலலிதா நேற்று முன்தினம் கண்டனம் தெரிவித்தது தொடர்பாக குறிப்பிட்ட பாலசுப்பிரமணியம் அ.தி.மு.க வேவிடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் நீக்குப் போக்குக் காட்டி வருகையில் மற்றைய கட்சிகள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்குவதாக அவர் எவ்வாறு கூறமுடியும் என்று வினாவினார்.

அச்சம், வருவாய் ஆகிய இரு காரணங்களுக்காக அ.தி.மு.க. விடுதலைப்புலிகளின் கள்ளக்கடத்தல் நடவடிக்கைகளை அனுமதித்து வருவதாக அவர் குற்றம் சாட்டினார்.

கடற்படையினரும் வேறு பாதுகாப்பு அமைப்புகளும் கைது செய்த பல நபர்கள் அ.தி.மு.க வினரின் நெருக்குதலின் பேரில் விடுவிக்கப்பட்டிருப்பதாகவும் மாநில காவல் துறையினரும் மாநில அரசின் கோரிக்கைகளுக்கு ஏற்ப விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை கண்டும் காணாதது போல் இருப்பதாக அவர் கூறினார். இந்த விடையங்களை சட்டப் பேரவையில் இந்திரா காங்கிரஸ் கட்சியினர் எழுப்ப பேரவைத்தலைவர் அனுமதிக்க வில்லை எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

## இலங்கை அகதிகள் வீடுமீது பிரான்சில் குண்டுத்தாக்கு

(ட்ரையர்)

பிரான்சில் இலங்கை அகதிகள் ஐவர் தங்கியிருந்த இல்லமொன்றின் மீது இனந்தெரியாதவர்கள் பெட்ரோல் கைக்குண்டுகளை வீசி தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

இச்சம்பவம் பிரான்சின் தென்மேற்கு எல்லை யோரமாக இருக்கும் சுவிபுருக்கென் என்ற இடத்திற்கு அண்மையாகவுள்ள நகரொன்றில் இடம் பெற்றிருக்கும் இத் தாக்குதல் தொடர்பாக மூவரைத் தேடி வருவதாக கடந்த சனிக்கிழமை பொலிசார் தெரிவித்தனர்.

மேலும் இச்சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை எனவும் சம்பவம் நடைபெற்ற இடத்தில் கார் ஒன்றுக்குள் மூவர் இருந்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

### சடலமாக மீட்பு

கடந்த 16ஆம் திகதியிலிருந்து காணாமற் போனதாக கருதப்பட்ட அளவெட்டி கிழக்கு கும்பனையைச் சேர்ந்த துரையன் (வயது 22) என்பவர் வயல் கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

## தொழில் நுட்பக்கல்லூரி வினாத்தாள்கள் வந்தன

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ள இறுதிப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் நேற்று யாழ் கல்வித் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்தன.

கொழும்பிலிருந்து விமானம் 'வாதுவ' கப்பல்மூலம் பருத்தித்துறை துறைமுகத்திற்கு எடுத்துவரப்பட்டு காலை 10 மணியளவில் கல்வித் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்தன இதனுடன் அனுமதி அட்டைகளும் வந்தன. (யோ)

## போட்டிப் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழகத்தில் தரம் மூன்று தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதற்கான பரீட்சை அடுத்த மாதம் இரண்டாம் திகதி யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

காலை 9-30 மணிக்கு ஆரம்பமாகும் ''பொது உளச் சார்பு'' பரீட்சையின்போது தேசிய அடையாள அட்டையை தவறாது கொண்டு வரும்படி சிரேஷ்ட உதவிப் பதிவாளர் கேட்டுள்ளார். (05)

### போதனாசிரியர் கூட்டம்

நாளை காலை 9. 00 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் தொலைக்கல்வி சிரேஷ்ட போதனாசிரியர் கூட்டமொன்று நடைபெறும். மேமாதம் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் தொலைக்கல்வி முதலாம் ஆண்டு-இறுதிப் பரீட்சை நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

### கோழிகளுக்கு நோய்

(யாழ்ப்பாணம்)

நவாலிப் பகுதியில் வளர்ப்புக் கோழிகளுக்கு தூக்கநோய் (ரணிக்கட்) காரணமாக தொடர்ச்சியாக இறந்துவருவதாகத் அவ்வூர்வாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதற்கு நாட்டில் நிலவும் கடும் வெப்பநிலையினாலேயே இவ் இறப்பு ஏற்படுவதாகவும் மிருக வைத்தியர் ஒருவர் தெரிவித்தார்.

இதே வேளை இந்நோயினால் இதுவரை 50கும் மேற்பட்ட கோழிகள் நவாலி வடக்கில் இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [05]

# தோல்வியைச் ஜீரணிக்க அரசு தயாராக இல்லை

## - ஐவன் தெரிவிப்பு

(கொழும்பு)

''மாகாணசபை கலைக்கப்படும்போதுதான் வெற்றிவாகை சூடமுடியும் என முழு நம்பிக்கையுடன் இருந்த ஐ. தேசியக் கட்சியின் எதிர்பார்ப்பை ஆட்டம்காணச் செய்தவர் லலித் அத்துலத் முதலி யாவார்'' என பத்திரிகையாளர் ஐவன் தெரிவித்தார்.

''தனக்கு ஏற்படும் அரசியல் தோல்வியை ஜீரணிக்கக் கூடிய நிலையில் இன்று அரசாங்கம் இல்லை. இதற்காக எந்த விதத்தில் செயற்படவும் அரசாங்கம் தயங்காது.

''அத்துலத்முதலி ஒருபிழை விடாத அரசியல் வாதியில்லை சிறிமாவோவின் அரசியல் உரிமை பறிக்கப்பட்டபோது அதனை ஆதரித்து வாக்களித்தார் என மேலும் அவர் தெரிவித்தார்.

### பிரேமதாசா

அத்துலத்முதலி தனது இலட்சியத்திற்காக அரசாங்கத்தில் இருந்த பதவிகளை உதறினார் என்றும் தற்போது அதே கொள்கைக்காக உயிரைத் தியாகம் செய்துள்ளார் என்றும் அவர் கூறினார்.

''எமது கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து பல இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. பன்னல கூட்டத்திற்கு குண்டு வீசினர். இதனை ஐ தேசிய கட்சி பிரமுகர்களே முன்னின்றுசெய்தனர் என்பது அனைவருக்கும் தெரியும். பல கூட்டங்களை குழப்பினர். இதுகுறித்து இதுவரை விசாரணை எதுவும் இல்லை என அவர் குறிப்பிட்டார்.

### அத்துலத்முதலி

மேலும் அவ்வறிக்கையில் கூறியிருப்பதாவது: உண்மை நிலையைக் கண்டறிய முன்னரே இக்கொலையில் அரசுக்குப் பங்கிருப்பதாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும், காமினி திசாநயக்காவும், குற்றம் சாட்டியுள்ளனர். இவர்களது கூற்று தவறானதும் ஆதாரமற்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தமது கடந்த 4 ஆண்டுகளின் போது பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு தன்னால் இயன்றவற்றைச் செய்துள்ளது.

ஜே. வி. பி. பயங்கரவாதிகளால் ஐக்கிய தேசியக் கட்சியினரே அதிகம் பாதிக்கப்பட்டனர் என்பதைப் பொது மக்கள் அறிவர். தேர்தல்களின் போதும் நாட்டில் சட்டமும், ஒழுங்கும் நிலவும் வேளையில் எல்லாம் ஐ தே. கட்சியின் பெரும்பான்மை வாக்குகள் அதிகரித்துள்ளன என்பதை 1946 ஆம் ஆண்டு வரையான புள்ளிவிபரங்கள் மூலம் அறிய முடிகிறது. தேர்தலை பின் போடுவதற்கு அரசாங்கம் எத்தனிக்கிறது என்ற திருமதி பண்டாரநாயக்காவின் கூற்று ஆதாரமற்றதாகும் அரசாங்கத்தின் ஆதரவுடன் புலிகள் இயக்கம் கொழும்பில் செயற்படுகிறது என்ற காமினி திசாநாயக்காவின் கூற்று முட்டாள் தனமானதாகும். அரசு புலிகளுக்கெதிராக சண்டையிட்டு வருகிறது என்பது உலகுக்குத் தெரியும்.

தனது சொந்தக் கட்சியே தனது கணவனைக் கொலை செய்தது என்பதை திருமதி பண்டாரநாயக்கா மறந்து விடக்கூடாது என்றும் ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியின் தலைமைக்காக அண்மையில் இடம்பெற்ற போட்டியில் தான் தோல்வியடைந்ததை தாம் மறந்து விட்டதுபோல் காட்டுவதற்கு திரு. காமினி

## சேவை நீடிப்பு கோரிய ஊழியருக்கும் இடமாற்றம்

(சுன்னாகம்)

சுன்னாகம் மின்சார சபையிலிருந்து 55 வயதின் பின்னரான சேவை நீடிப்புக்கு விண்ணப்பித்தோரும் வடக்கிற்கு வெளியே இடமாற்றம் செய்யப்படுகின்றனர். சேவை நீடிப்பு தேவையாயின் வடக்கிற்கு வெளியே சேவையாற்ற வருமாறு இவர்கள் கட்டாயப் படுத்தப்படுகின்றனர்


ஏற்கனவே வடமாகாண இ. மி. சபையின் பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகத்திலிருந்து இரண்டு எழுதுவினைஞர்களும், 3 மின் அத்தியட்சகர்களும், யாழ்பிரதேச மின் பொறியியலாளர் அலுவலகத்திலிருந்து பொறியியல் உதவிய ளர் ஒருவரும், எழுதுவினைஞர் ஒருவரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பாக அரச அதிபரிடம் தொடர்பு கொண்டதாகவும், அவர் இலங்கை மின்சார சபையின் கொழும்பு தலைமையகத்துடன் தொடர்பு கொள்ளுவதாக கூறியதாகவும் மின்சாரசபை வட்டாரங்கள் கூறுகின்றன. (11)

### யாழ் கோட்ட அதிபர் கூட்டம்

மேதின ஊர்வலம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை ஆராய்வதற்கான அவசர கூட்டம் இன்று காலை 10 00 மணிக்கு இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். சகல அதிபர்களும் தவறாது சமுகம் தருமாறு யாழ் கோட்ட கல்விப் பணிப்பாளர் வேண்டுகின்றார்.

### மே நாள்

மே நாள் ஏற்பாட்டுக் குழு அறிவுறுத்தியுள்ளது. தமிழீழ போராட்ட வரலாற்றின் முக்கிய கட்டங்கள், பேரினவாதக் கொடூரத்தின் மத்தியிலும் உழைக்கும் மக்களது ஆற்றலினால் பொருளாதாரத்தடை தோல்வியுறுதல், உழைப்பின் பயனாக அரசியல், சமூக பொருண்மிய மேம்பாட்டுக்கான அடிக்கட்டுமானப் பணிகள் செயற்படுத்தப்படல், சிறிலங்கா அரசின் இனவெறியால் ஏற்படும் அவலங்கள், கிளாலிப் படுகொலைகள், கடற்றொழிலாளர் படும் இன்னல்கள். இன்னல்களுக்கு மத்தியிலும் கல்வியில் சாதனைகள் தென்தமிழீழத்தில் இராணுவ அட்டூழியங்கள்,

UNIKCO

COMPUTER CENTRE

- BASIC
- d BASE III PLUS
- WORD PROCESSING (Word Star Rel 5.5)
- PASCAL
- LOTUS 1-2-3

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

25 04-93 (சனி, ஞாயிறு) - 3 p. m.

26-04 93 (திங்கள், புதன், வெள்ளி) - 3 p. m.

மேலதிக விபரங்கட்கு,

பற்றி முதலமைச்சரும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளருமான செல்வி ஜெயலலிதா நேற்று முன்தினம் கண்டனம் தெரிவித்தது தொடர்பாக குறிப்பிட்ட பாலசுப்பிரமணியம் அ.தி.மு.க வேவிடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் நீக்குப்போக்குக் காட்டி வருகையில் மற்றைய கட்சிகள் விடுதலைப் புலிக

என்ற இடத்திற்கு அண்மையா

## சடலமாக மீட்பு

கடந்த 16ஆம் திகதியிலிருந்து காணாமற் போனதாக கருதப்பட்ட அளவெட்டி கிழக்கு கும்பனையைச் சேர்ந்த துரையன் (வயது 22) என்பவர் வயல் கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

# தொழில் நுட்பக்கல்லூரி வினாத்தாள்கள் வந்தன

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ள இறுதிப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் நேற்று யாழ் கல்வித் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்தன.

கொழும்பிலிருந்து விமானம் மூலம் எடுத்து வரப்பட்ட இவ் வினாத்தாள்கள் காங்கேசன் துறையில் தரித்து நின்ற 'வாதுவ' கப்பல்மூலம் பருத்தித்துறை துறைமுகத்திற்கு எடுத்துவரப்பட்டு காலை 10 மணியளவில் கல்வித் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்தன இதனுடன் அனுமதி அட்டைகளும் வந்தன. (யோ)

## எறிகணை வீச்சு

காரைநகர் கரையோர காவல் நிலைகளிலுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் நேற்றுமுன்தினம் இரவு 10-40 மணியளவில் பொன்னாலை, மூளாய் பகுதிகளிலுள்ள மக்கள் குடியிருப்புக்களை நோக்கி ஐந்துக்கும் மேற்பட்ட எறிகணைகளை வீசினர். இதனால் மக்கள் இரவை அச்சத்துடன் கழித்தனர். இச் சம்பவத்தில் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லையெனத் தெரியவருகிறது. (41)

## லலித்தின்

அனுபவங்களை ஏற்கனவே போதியளவுக்குக்கண்டுள்ளது. இதுபோன்ற கோழைத்தனமான செயல்களைக் கட்டுப்படுத்த அனைத்து ஜனநாயக சக்திகளும் கைகோர்த்துச் செயற்பட இது உரிய தருணமாகும் என்றும் ஜனாதிபதி தனது செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.


## முக்கிய அறிவித்தல்

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இன்று (25-04-1993) நடைபெற இருந்த ''அரிச்சந்திர மயானகாண்டம்'' நாடகம் தவிர்க்க முடியாத காரணத்தால் பின் போடப் பட்டுள்ளது. என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம். இந் நாடகம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

மேஜர் சுபாஸ் சனசமூக நிலைய நிர்வாகிகள்

(4757)

## ஸ்ரீதர் திரையரங்கில்

# 100 RIFLES

## [100 துப்பாக்கிகள்]

தமிழ் விளக்கம்

தினசரி மாலை 4 மணி, 6 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10.30 மாலை 4 மணி, 6 மணி

[சி-6376]




இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


மூவர் இருந்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

வடக்கில் இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [05]

வரை விசாரணை எதுவும் இல்லை என அவர் குறிப்பிட்டார்.

# UNIKCO

## COMPUTER CENTRE

- BASIC
- d BASE III PLUS
- WORD PROCESSING (Word Star Rel 5.5)
- PASCAL
- LOTUS 1-2-3

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

25-04-93 (சனி, ஞாயிறு) - 3 p. m.
26-04-93 (திங்கள், புதன், வெள்ளி) - 3 p. m.

மேலதிக விபரங்கட்கு,

37, CLOCK TOWER ROAD,
JAFFNA.
(வெலிங்டன் சந்திக்கு அருகாமை)

(சி-6499)


# அறிவித்தல்

## யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் அனைவரினதும் கவனத்திற்கு

எதிர்வரும் மே தினப் பேரணி ஏற்பாடுகள் சம்பந்தமான கலந்துரையாடல் பின்வரும் கால நேர அட்டவணையின்படி நடைபெற இருப்பதனால், யாழ். மாவட்டத்திலுள்ள பின்வரும் மன்றங்களின் சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் அனைவரும் தத்தம் பகுதியில் நடைபெறும் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகிறேன்.

| | கலந்துரையாடல் நடைபெறும் காலமும் நேரமும் | கலந்துரையாடல் இடம்பெறும் இடம் | கலந்துரையாடலில் கலந்து கொள்ள வேண்டியவர்கள் |
|---|---|---|---|
| 01. | 93-04-26 காலை 10 மணி | கணேசா வித்தியா சாலை சித்தன்கேணிச் சந்தி | வலி மேற்குப் பிரதேச சபையின் ஊழியர்களும் இப்பிரதேச சபை எல்லைக்குள் (சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு) இயங்கும் சகல சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் அனைவரும். |
| 02. | 93-04-26 காலை 10 மணி | உடுவில் மான்ஸ் தமிழ் கலவன் பாடசாலை | வலி தெற்கு, வலி வடக்குப் பிரதேச சபைகளின் ஊழியர்களும் இப்பிரதேச சபைகளின் எல்லைக்குள் இயங்குகின்ற சகல சனசமூக நிலையங்களின் நிர்வாகிகளும். |
| 03. | 93-04-26 பி. ப. 02 மணி | அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி. | வலி கிழக்கு பிரதேச சபையின் ஊழியர்களும் வலி கிழக்குப் (கோப்பாய் உ. அ. அதிபர் பிரிவு)பிரதேச சபையின் எல்லைக்குள் இயங்குகின்ற சகல சனசமூக நிலையங்களின் நிர்வாகிகளும். |
| 04. | 93-04-26 பி. ப. 02 மணி | நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம். | பருத்தித்துறைப் பிரதேச சபை, பருத்தித்துறை நகரசபை, வல்வெட்டித்துறை நகர சபை, வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சபை ஆகிய வற்றின் ஊழியர்களும் இந்தச் சபைகளின் எல்லைக்குள் இயங்குகின்ற சகல சனசமூக நிலையங்களின் நிர்வாகிகளும். |
| 05. | 93-04-26 பி. ப: 02 மணி | சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி. | சாவகச்சேரி நகர சபை, சாவகச்சேரிப் பிரதேச சபை ஆகியவற்றின் ஊழியர்கள், இம்மன்றங்களின் எல்லைக்குள் இயங்குகின்ற சகல சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் ஆகியோர் அனைவரும். |

சுந்தரம் டிவகலாலா
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம். 1993-04-23 (சி-6500)

## மே நாள்

மே நாள் ஏற்பாட்டுக் குழு அறிவுறுத்தியுள்ளது. தமிழீழ போராட்ட வரலாற்றின் முக்கிய சட்டங்கள், பேரினவாதக் கொடூரத்தின் மத்தியிலும் உழைக்கும் மக்களது ஆற்றலினால் பொருளாதாரத்தடை தோல்வியுறுதல், உழைப்பின் பயனாக அரசியல், சமூக பொருண்மிய மேம்பாட்டுக்கான அடிக்கட்டுமானப் பணிகள் செயற்படுத்தப்படல், சிறிலங்கா அரசின் இனவெறியால் ஏற்படும் அவலங்கள், கிளாலிப் படுகொலைகள், கடற்றொழிலாளர் படும் இன்னல்கள். இன்னல்களுக்கு மத்தியிலும் கல்வியில் சாதனைகள் தென்தமிழீழத்தில் இராணுவ அட்டூழியங்கள், பெண் விடுதலை,

மேலும் ஊர்திகளை அமைத்தவர்களின் பெயர், மற்றும் விபரங்கள் ஊர்திகளில் முன்னும், பின்னும் தெளிவாகக் குறிப்பிடப் படவேண்டும். சாரதி. உதவியாளர், மற்றும் ஊர்தி சித்தரிப்பு பாத்திரங்களைத் தவிர ஏனையோர் ஊர்தியில் செல்வது தவிர்க்கப்படல் வேண்டும் எனவும் 24 அடி நீளம்-11 அடி அகலம்-12 அடி உயரம் கொண்டதாக ஊர்திகள் அமையவேண்டும் எனவும் ஏற்பாட்டுக்குழு அறிவுறுத்தியுள்ளது.

## மின்சாரம்

பின் ஐந்து அல்லது ஆறு பொலிசார் அப்பகுதியில் காணப்பட்டனர்.

''அப்பகுதி முழுவதும் மின்சாரம் துண்டிக்கப் பட்டிருந்தது. பின்னர் நாம் ஜெனரேற்றர் மூலம் கூட்டம் நடைபெற்ற இடத்திற்கு மின்சாரம் பெற்றுக் கொண்டோம். இவ்வாறு இருள் சூழ்ந்திருந்தமையே கொலையாளி தப்பிச் செல்ல வாய்ப்பாக இருந்தது' எனவும் அவர் தெரிவித்தார்.

போடுவதற்கு அரசாங்கம் எத்தனிக்கிறது என்ற திருமதி பண்டாரநாயக்காவின் கூற்று ஆதாரமற்றதாகும் அரசாங்கத்தின் ஆதரவுடன் புலிகள் இயக்கம் கொழும்பில் செயற்படுகிறது என்ற காமினி திசாநாயக்காவின் கூற்று முட்டாள் தனமானதாகும். அரசு புலிகளுக்கெதிராக சண்டையிட்டு வருகிறது என்பது உலகுக்குத் தெரியும்.

தனது சொந்தக் கட்சியே தனது கணவனைக் கொலை செய்தது என்பதை திருமதி பண்டாரநாயக்கா மறந்துவிடக்கூடாது என்றும் ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியின் தலைமைக்காக அண்மையில் இடம்பெற்ற போட்டியில் தான் தோல்வியடைந்ததை தாம் மறந்து விட்டதுபோல் காட்டுவதற்கு திரு. காமினி திசாநாயக்கா எத்தனிக்கக் கூடாது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. அத்துடன் விரைவில் உண்மை வெளியாகும் என்றும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகள்

ந்த அப்பையா பாலகிருஷ்ணன் என தாம் அடையாளம் கண்டதாகவும் இவர் விடுதலைப்புலி போராளியாக இருக்கலாம் என தாம் கருதுவதாகவும் சிறிலங்கா பொலிசார் லங்காபுவத்திற்கு தெரிவித்துள்ளனர்.

## துப்பாக்கி

கிச் சூட்டுப் பரிமாற்றம் இடம் பெற்றதாகவும் இதனைத் தொடர்ந்து கூட்டத்தை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்தவாறு ஓடினார் என்றும் கட்சியின் பேச்சாளர் விக்கிரம வீரசூரிய தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்

## குருசுமுத்து

நவாலியூரைப் பிறப்பிடமாகக் கொண்ட குருசுமுத்து அவர்கள் 23-04-93 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், திரு. அடைக்கலம், வெனோ, நாதன் (London), நேசமணி, சங். சகோ. றொசிற்றா (தி.கு.க., Pakistan) செல்வி தவம் (பத்திரிசியார் கல்லூரி ஆசிரியை), பவளம், அன்னமேரி (ஜெயந்தி B. A. University of Jaffna) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. சிலுவைராசா, திருமதி அடைக்கலம், திரு. யேசுதாசன், திருமதி யோண் அல்பேட்(U.K) ஆகியோரின் மாமனாருமாவார். அன்னாரது மரணச் சடங்கு பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
தவம் குருசுமுத்து

நவாலி தெற்கு,
மானிப்பாய். [4754]